# கொத்தாளத்தான் அவதாரமெடுத்த எடப்பாடி பழனிச்சாமி..!

மதுரை மாவட்டம் அரிட்டாப்பட்டியில் பூமிக்கடியில் கிடைக்கும் டங்ஸ்டன் என்ற விலையுயர்ந்த உலோகத்தை தோண்டி எடுக்க ஒன்றிய அரசு முடிவெடுக்கிறது.

இதற்கான சட்ட மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்கின்றது. இது பத்து மாதங்களுக்கு முன்னால் நடந்த கதையல்ல வரலாறு..! அதாவது ஃப்ளாஷ் பேக். இங்க அப்டியே கட் பண்ணி நடப்பு நிகழ்ச்சிக்கு நேயர்கள் அனைவரையும் வரவேற்கின்றேன்.

இதைத் தோண்டியெடுக்க வேண்டுமென்றால், ஏதோ ஒரு இடத்தில் குழாய் போட்டு... தண்ணீர் அல்லது குரூட் ஆயில் போல எடுத்துவிட முடியாது. மாறாக ஒரு கிராமத்தையே தோண்டி எடுக்க வேண்டியிருக்கும் என்பது மக்களுக்குப் புரிய வருகிறது.

அதாவது அங்கு வசிக்கும் மக்களின் வாழ்விடம், வேளான் விளை நிலங்கள் உள்ளிட்ட அனைத்தையும் விட்டு விட்டு வேறு இடத்திற்கு அவர்கள் குடிபெயர வேண்டியிருக்கும்.


இது புரியவந்த போது மக்கள் போராட்டத்தை முன்னெடுக்கின்றனர். அந்த பகுதியைச் சார்ந்த தி.மு.கழக அமைச்சர் மூர்த்தி அவர்கள் நேரில் சென்று விசாரித்து நிலைமையின் விபரீதத்தைப் புரிந்து கொண்டு மக்களுக்கு நம்பிக்கை கொடுத்து விட்டு, முதலமைச்சரிடம் இந்த டங்ஸ்டன் சுரங்கம் பற்றிய உண்மை நிலவரத்தை எடுத்துரைக்கின்றார்.

மக்கள் கிராமசபையைக் கூட்டி, அங்கே இந்தச் சுரங்கம் வர அனுமதியில்லை என்று தீர்மானம் போடுகின்றார்கள். உடனடியாக இது சம்பந்தமாக நீர் மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களும், முதலமைச்சரும் சம்பந்தப்பட்ட ஒன்றிய அரசின் துறை அமைச்சருக்கும் இறுதியாக பிரதமர் மோடிக்குமே கடிதம் அனுப்புகின்றனர். பேசுகின்றனர்.

ஒன்றிய அரசு பிடி கொடுக்காத நிலையில் அதாவது ‘நீட்’டை நுழைத்தது போல, உதய் மின் திட்டத்தை நுழைத்தது போல இதையும் நிறைவேற்றிட உறுதியாக இருக்கின்றனர் என்பது தெள்ளத் தெளிவாக தெரிகிறது. இதற்கு மேல் இவர்களிடம் பேசிப் பலனில்லை என்பதை உணர்ந்த முதலமைச்சரோ, அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் எடுக்க தமிழ்நாடு அரசு அனுமதிக்காது என்று திட்டவட்டமாக அறிவிக்கின்றார்.

அதனை அடுத்து இந்த பிரச்சினையின் அடுத்தக் கட்ட முன்னெடுப்பாக சட்டமன்றத்தில், இந்தப் பிரச்சினைக்கு எதிராக அதாவது அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் எடுக்கும் ஒன்றிய அரசின் முடிவுக்கு எதிராக ஒருமனதாக தீர்மானம் போட்டு அனுப்புவதற்காக சட்டமன்றத்தில் இந்த மசோதா தாக்கல் செய்யப்படுகின்றது.

தமிழ்நாட்டு மக்களின் நலன் விரும்பும் அனைவருமே இதற்கு ஒட்டுமொத்த 234 சட்டமன்ற உறுப்பினர்களும், ஆதரவாக வாக்களித்து, ஒன்றிய அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்க வேண்டும் என்பது தான் அனைவரின் எதிர்பார்ப்பு.



**சௌமியன் வைத்தியநாதன்**
அமைப்பாளர்,
மயிலாடுதுறை மாவட்ட
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

ஆனால், பாஜகவின் நான்கு எம் எல் ஏக்களும், இந்த தீர்மானத்தை ஆதரிக்கவில்லை. பாஜக என்ற கட்சி தமிழ்நாட்டிற்கும், தமிழர்களுக்கும், தமிழுக்கும் எதிரான கட்சி என்பதால் தான் அது இங்கே செல்ஃப் எடுக்கவில்லை என்பது அனைவரும் அறிந்ததே!

ஆனால் அதிமுக என்ன செய்தது ! அவர்களால் ஒன்றிய மோடி அரசுக்குப் பயந்து இந்த தீர்மானத்தை வெளிப்படையாக எதிர்க்க முடியாது. அப்படிச் செய்தால், தமிழ்நாட்டு மக்கள் அதிமுகவை தமிழ்நாட்டை விட்டே துரத்தி அடித்துவிடுவார்கள். ஆனால் அதே சமயம் பாஜகவுக்கும் இதில் எந்த பாதிப்பும் வந்து விடக் கூடாதே என்ற தங்களது வழமையான அடிவருடித்தன எண்ணத்தில்

இந்தப் பிரச்சினைக்கே திமுக தான் காரணம் என்பது போல், எடப்பாடி பழனிச்சாமி அவர்கள் சட்டமன்றத்தில் சன்னதம் வந்தவர் போல் நீட்டி முழக்கி... ஒரு நேர்மையாளன் பேசுவது போல் சத்தமாக பேசி முடித்திருக்கின்றார். அதை அப்படியே பாஜக ஆதரவு ஊடகங்கள் எடுத்து அதற்கு நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களும், முதலமைச்சரும் கூறிய ஆதாரப்பூர்வமான பதில்களை

வெட்டியும், ஒட்டியும் திரித்தும்... தங்கள் வசதிக்கேற்ப ஒளிபரப்பி வருகின்றனர்.

இது ஒன்றிய பாஜக அரசின் தமிழ்நாட்டு மக்கள் மீதான இன்னுமொரு கொடூர தாக்குதல் என்பது மக்களுக்கு முழுமையாக தெரிந்துவிடக் கூடாது என்பதற்காகவே தேவையே இல்லாமல், பழனிச்சாமி சட்டமன்றத்தில் ஒரு அவதூறுக் கூத்தை ஆடித் தீர்த்து தனது பாஜக விசுவாசத்தை காட்டிக் கொண்டிருக்கின்றார் !

அவர் நியாயவானாக இருந்திருந்தால், ஒன்றிய பாஜக அரசு இப்படி தமிழ்நாட்டிற்கு எதிராக சதி செய்கின்றதே அதை இங்கிருக்கும் பாஜகவினரும் ஆதரிக்கின்றனரே என்று தன்னுடைய பாஜக எதிர்ப்பை அல்லவா சட்டமன்றத்தில் மிகப் பலமாகக் காட்டியிருக்க வேண்டும் ?! இந்தப் பிரச்சினையில் நாங்கள் தமிழ்நாடு அரசுடன் தோளோடு தோள் நின்று முழுமையாக ஒன்றிய பாஜக அரசை எதிர்த்துப் போராடி, இந்தத் திட்டம் தமிழ்நாட்டிற்கு வராமல் காப்பாற்றுவோம் என்றல்லவா சன்னதம் வந்து சட்டமன்றத்தில் ஆடியிருக்க வேண்டும் ?!

அப்படி ஏதாவது அவர் செய்திருந்தால், அடுத்த நாளே அவர் வீட்டிற்கும், அவரது உறவினர்கள், கூட்டாளிகள் மற்றும் சக முன்னாள் அமைச்சர்கள் வீடுகளுக்கும் ஈடி ரெய்ட் வந்து விடுமே இன்னும் பலப்பல வழக்குகள் அவர் மீது பாய்ந்து விடுமே. அந்தப் பயம் அவருக்கு இருக்காதா ?! அதனால் தான் பாஜக மீது விழவேண்டிய அடியை எப்படியாவது மடைமாற்றி திமுக மீது திசை திருப்ப ஒரு கள்ள ஆட்டம் ஆடியிருக்கின்றார் அந்த அயோக்கிய சாமி !

கமலஹாசன் நடித்த ‘விருமாண்டி’ படத்தில்... விருமாண்டியின் நிலத்தில் தான் வருடம் முழுவதும் அருமையான தண்ணீர் வரும் ஊற்று இருக்கும். ஆகவே அந்த நிலத்தை கள்ளத்தனமாக அவனிடமிருந்து அபகரிக்க கொத்தாளத்தான் எனும் கொத்தாளத் தேவன் முயற்சிப்பான். அதன் பொருட்டு பல கொலைகள் விழுந்து சிறையில் இருக்கும் கொத்தாளத்தேவனிடம் ஒரு ஊடகம் பேட்டி எடுக்கும். அது தான் படத்தின் நேற்றைய சட்டமன்ற நிகழ்ச்சி போன்ற முதல் பாதி..!

கொத்தாளத்தான் சொல்வதைக் கேட்கும் நமக்கெல்லாம் விருமாண்டி தான் குடித்துக் கும்மாளமிட்டு, பொறுப்பற்று திரிந்து பெண் பித்துப் பிடித்து கொலை செய்யும் கொலை பாதகன் போல கதை செல்லும். அவன் சொல்வதை, பேட்டி எடுக்கும் அந்த ஊடகவியலாளர் பெண்மணியும் நம்புவார் படம் பார்க்கின்ற நாமும் நம்புவோம் !

ஆனால் இடைவேளைக்குப் பிறகு விருமாண்டி நடந்த கதையை அல்ல அல்ல உண்மை வரலாற்றைச் சொல்லும் போது தான் அனைவருக்குமே கொத்தாளத்தான் தான் படுபாதக கொலைகாரப் பாவி என்பது புரியும்.

கொத்தாளத்தான் சொல்லுகின்ற கதையிலும்.... அடுத்ததாக விருமாண்டி கூறுகின்ற உண்மை வரலாற்றிலும்.... ஆக இரண்டிலுமே காட்சிகள் ஒரே மாதிரியாகத் தான் இருக்கும். ஆனால் கொத்தாளத்தான் கதை விடும் பொழுது அந்தக் காட்சிகளைக் காட்டி... உணர்வுப் பூர்வமாக பொய்களைப் பேசி விருமாண்டி கேரக்டரையே அஸாஸினேஷன் செய்வான்.

ஆனால் உண்மையாக நடந்த வரலாறு என்னவென்றால் இந்தப் பதிவின் முதல் பத்தியில் கூறியிருப்பது போல பத்து மாதங்களுக்கு முன்பாக ஆகஸ்ட் 2023 அன்று, நாடாளுமன்றத்தில் இந்த சட்டத் திருத்த மசோத கொண்டு வந்த பொழுது மக்களவையில் பாஜகவுக்கு அறுதிப்பெரும்பான்மை இருந்தால், திமுக எம்பிக்கள் எவ்வளவு எதிர்த்துப் பேசினாலும், எந்தப் பலனுமின்றி இந்த மசோதாவை அது நிறைவேற்றி விட்டது. ஆனால் மாநிலங்கள் அவையிலோ பாஜகவுக்கு பெரும்பான்மை கிடையாது.

பாஜகவின் கூட்டணிக் கட்சிகள் எல்லாம் ஆதரவாக வாக்களித்தால் தான் தமிழ்நாட்டு மக்களுக்கு எதிரான அந்த சட்டத் திருத்த மசோதாவை நிறைவேற்ற முடியும்.. தமிழ்நாட்டிற்கு எதிரான... அதாவது மதுரை அரிட்டாப்பட்டியில் கிராமத்தையே தோண்டி எடுக்கும் அநீதிக்கு வழிவகுக்கும் ஒன்றிய அரசின் சட்டத் திருத்த மசோதாவுக்கு ஆதரவாக வாக்களித்து அதை வெற்றிபெறச் செய்த பாஜகவின் கூட்டணிக் கட்சிகள் எவை எவை என்று தெரியுமா ?!

ஆந்திர ஜகன்மோகன் ரெட்டியின் ஒய் எஸ் ஆர் காங்கிரஸ், ஒடிசாவின் பிஜு ஜனதா தளம் மற்றும் தமிழ்நாட்டைச் சார்ந்த அதிமுக மற்றும் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் எம்பிக்கள் தான் அந்த கோடாரிக் காம்புகள் !

ஆம் தமிழ்நாட்டிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட அதிமுக மற்றும் தமாக கட்சிகளின் அந்த 11 எம் பிக்கள் வாக்களித்திருக்கா விட்டால், அந்த சட்டத்திருத்த மசோதா வெற்றி பெற்றிருக்காது. இன்றைக்கு மதுரை அரிட்டாப்பட்டியை தோண்டி எடுக்க ஒன்றிய அரசு ஏலமும் விட வாய்ப்பிருந்திருக்காது !

இதில் கொடுமை என்னவென்றால் அதிமுக எம்பி தம்பிதுரையும், தமிழ் மாநில காங்கிரஸ் எம்பி ஜி.கே. வாசனும் அந்த சட்டத்திருத்த மசோதாவுக்கு ஆதரவாக... ‘வாங்குன காசுக்கு மேல கூவுராண்ட ங்கொய்யால’ என்று ஒரு படத்தில் லிவிங்ஸ்டன் சொல்வது போல ஒன்றிய அரசை தடவித் தடவிக் கொடுத்து... அடிவருடி அடிவருடி ஆனந்தப்படுத்தி அந்த மசோதாவைக் கொண்டு வந்ததற்காக நன்றி சொல்லியெல்லாம் பேசியிருக்கும் காணொளிகள் விருமாண்டி படத்தின் இரண்டாம் பாதியில் வரும் உண்மைச் சம்பவங்கள் போல இணையமெங்கும் வைரலாகி வருகின்றன !

அந்தப் படத்தில் படுபாதக கொலைகாரனாகவும் சுயநலத்திற்காக தன் மனைவி மக்களையே காவு கொடுக்கத் தயாராகும் கொத்தாளத்தான் போல அதிமுகவின் எடப்பாடி நடந்து கொண்டிருந்து விட்டு இன்றைக்கு சட்டமன்றத்தில்... பாஜகவுக்கு எதிரான பிரச்சினையை, திமுகவுக்கு எதிராக திருப்பிவிட்டு பாஜகவை காப்பாற்ற நினைப்பது தமிழ்நாட்டிற்கும்... அந்த அரிட்டாப்பட்டி மக்களுக்கும் அவர் செய்திருக்கும் துரோகத்தின் அல்டிமேட் உச்சம் என்றே சொல்ல வேண்டும் ! பாஜக கூட்டணியிலிருந்து வெளியே வந்து விட்டோம் என்று நாடாளுமன்ற தேர்தலுக்கு முன்பே அறிவித்த அதிமுக நாடாளுமன்றத்தில் திமுக எதிர்த்த மசோதாவை மாநிலங்கள் அவையில் பாஜகவுக்கு ஆதரவாக வாக்களித்து வெற்றிபெற வைத்ததன் காரணம் என்ன! அவர்கள் இன்னமும் பாஜகவோடு ரகசிய கூட்டணியில் தான் இருக்கின்றார்கள் என்பது தான் அந்தக் காரணம்..!

எடப்பாடி பழனிச்சாமி என்ற கொத்தாளத்தான்கள் தமிழ்நாட்டின் ஆகப் பெரும் துரோகிகள் ! ஆனால் நம் திராவிட மாடல் ஆட்சியின் நாயகரான முதலமைச்சரோ... நான் முதலமைச்சராக இருக்கும் வரையில் மதுரை அரிட்டாப்பட்டியில் டங்ஸ்டன் எடுப்பதற்காக சுரங்கம் தோண்ட அனுமதிக்க மாட்டேன் என்று திட்டவட்டமாக அறிவித்து இந்த அயோக்கிய சிகாமணிகள் முகத்தில் கரி பூசியிருக்கின்றார்..!

கெட்டிக்காரன் புளுகாக இருந்தால் எட்டு நாட்களுக்காவது தாக்குப் பிடித்திருக்கும் ஆனால் இந்த முட்டாள் அடிமைகளின் புளுகு எட்டு மணி நேரத்திற்கு கூட தாக்குப் பிடிக்கவில்லை !



புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், மாஞ்சன்விடுதி வருவாய் கிராமத்தில், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் சார்பில் 11.12.2024 அன்று நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன், மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மு.அருணா தலைமையில், பயனாளிகளுக்கு பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் அ.கோ.ராஜராஜன், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் செல்வி.பா.ஐஸ்வர்யா, தனித் துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) திருமதி.அ.ஷோபா, திருவரங்குளம் ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி.வள்ளியம்மை தங்கமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## தமிழ்நாட்டின் உரிமைகள் – நலன்களுக்காக

# நாடாளுமன்றத்தில் நாள்தோறும் குரல் எழுப்பும் கழக எம்.பி.க்கள்!

## தொடர் கேள்விக் கணைகளால் திணறுகிறது ஒன்றிய அரசு!

**1. நூலகங்கள் அதிகரிக்கப்படுமா?**
**கதிர் ஆனந்த்**



நாட்டில் உள்ள நூலகங்களின் தரத்தை உயர்த்தவும் எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் குறித்து திமுக வேலூர் மக்களவைத் தொகுதி எம்.பி. கதிர் ஆனந்த் நாடாளுமன்ற மக்களவையில் பின்வரும் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் உள்ள நூலகங்களின் தரத்தை உயர்த்தவும் எண்ணிக்கையை அதிகரிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள் யாவை?

நூலகங்களுக்கான தேசிய இயக்கத்தின் கீழ், தமிழ்நாடு உட்பட நாட்டில், மாநில வாரியாக, மத்திய நூலகங்கள் மற்றும் மாவட்ட நூலகங்களின் எண்ணிக்கை எவ்வளவு?

நாட்டில் நூலகங்களை அமைப்பதற்காக இதுவரை வழங்கப்பட்ட மற்றும் செலவிடப்பட்ட நிதி உதவி விவரங்கள் யாவை?

தமிழ்நாட்டில்சரஸ்வதிமஹால்நூலகம் மற்றும் உலகப் புகழ்பெற்ற சென்னை கன்னிமாரா நூலகக் கட்டிடத்தின் வளர்ச்சி, மறுசீரமைப்பு, புதுப்பித்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றுக்கு அரசு நிதி ஒதுக்கியுள்ளதா, இல்லை என்றால் அதற்கான காரணங்கள் என்ன?

**2. தமிழ்நாட்டிற்கு வருமா கூடுதல் விரைவு இரயில்கள்?**
**தரணிவேந்தன் - சி. என். அண்ணாதுரை**





தமிழ்நாட்டில் நடப்பில் உள்ள விரைவு மற்றும் அதிவிரைவு ரயில் திட்டங்களின் தற்போதைய நிலை மற்றும் அவற்றை முடிக்க அரசு நிர்ணயித்திருக்கும் காலக்கெடு என்ன போன்ற விவரங்களை வெளியிடுமாறு ஆரணி தொகுதி திமுக எம்.பி. தரணி வேந்தன் மற்றும் திருவண்ணாமலை தொகுதிதிமுக எம்.பி. சி. என். அண்ணாதுரை ஆகியோர் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

நாட்டில் புதிதாக இரயில் பாதைகள் விரிவுபடுத்த அரசு வைத்திருக்கும் திட்டங்களும்,

அவ்வழித்தடங்களைத் தேர்ந்தெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் அளவுகோல்கள் என்ன, பயண நேரத்தைக் குறைத்தல், இணைப்பை மேம்படுத்துதல் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்தல் ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கூறிய ரயில் திட்டங்களினால் தமிழ்நாட்டிற்கு ஏற்படும் நன்மைகள், மேற்படி ரயில் திட்டங்களுக்கு சர்வதேச நிதியுதவி அல்லது ஒத்துழைப்பு கோரப்பட்டிருந்தால் அதன் தொடர்புடைய நாடுகள் மற்றும் நிறுவனங்களின் விவரங்கள் மற்றும் ஒப்பந்தங்களின் விதிமுறைகள், அரசு,

மாநில அரசுகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் நிதி ஆதாரங்களின் பங்குடன் இந்த ரயில் திட்டங்களின் வளர்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட மொத்த நிதி போன்ற விவரங்கள் உள்ளடங்கிய விரிவான அறிக்கை வெளியிடுமாறு அவர்கள் கேட்டுள்ளனர்.

**3. சரியாகத்தான் செயல்படுகிறதா தேசிய சுகாதார இயக்கம்?**
**டி. மலையரசன்?**

கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளில் சுகாதார சேவையை மேம்படுத்துவதற்கு தேசிய சுகாதார இயக்கம் (NHM) பங்களிக்கும்விதம் பற்றி விளக்கம் கேட்டு கள்ளக்குறிச்சி தொகுதி திமுக எம்.பி. டி. மலையரசன் மக்களவையில் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதில், தமிழ்நாட்டில் கடந்த மூன்று ஆண்டுகளில் NHMன் கீழ் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் அளவு, தாய் சேய் நலத்தை மேம்படுத்துதல், நோய்த்தடுப்பு மற்றும் நோய் கட்டுப்பாடு ஆகியவற்றில் தேசிய சுகாதார இயக்கம் முன்னெடுத்த திட்டங்களின் முன்னேற்றங்கள், தொலைதூர/ கிராமப்புற பகுதிகளில் NHMன் கீழ் மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் துணை மருத்துவ பணியாளர்கள் உட்பட சுகாதாரப் பணியாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட/முன்மொழியப்பட்ட நடவடிக்கைகளின் விவரங்கள், மொபைல் சுகாதார சேவைகள் மற்றும் சுகாதார முகாம்கள் ஆகியவற்றின் பங்கு, மலைப்பகுதிகளில் சுகாதார சேவைகளை கொண்டு செல்வதற்காக மேற்கொண்ட முயற்சிகள், மோசமான சுகாதார நிலை உள்ளா மாவட்டங்களில் சுகாதார உள்கட்டமைப்பை வலுப்படுத்த அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட / முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை குறித்து விரிவான பதிலை ஒன்றிய சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சகத்திடம் கோரியுள்ளார்.

# ஒன்றிய அரசின் முன்முயற்சிகள் என்னென்ன?

## மக்களவையில் டாக்டர் எஸ். ஜெகத்ரட்சகன் கேள்வி

புதுடெல்லி, டிச. 13-

திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரக்கோணம், நாடாளுமன்றஉறுப்பினர், எஸ். ஜெகத்ரட்சகன் மக்களவையில், தேசிய பல்லுயிரிய செயலாக்கத் திட்டத்தினை அனைத்து மாநிலங்களிலும் முன்னெடுத்து செல்ல, ஒன்றிய அரசிடம் முறையான திட்டங்கள்ஏதேனும்உள்ளனவா? என்றும், அதன்மூலம் சுற்றுச்சூழலை மேம்படுத்தவும்,காடுவளர்ப்பில்நீடித்த வளர்ச்சியை உறுதிப்படுத்தவும். முயற்சிகள் மேற்கொள்ளப்படுமா? என்று ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் இணையமைச்சர் கீர்த்தி வரதன் சிங் அவர்களிடம்கேள்விஎழுப்பினார்.

ஒன்றிய அரசின் சுற்றுச்சூழல் இணையமைச்சர் அளித்த பதில் வருமாறு :

கொலம்பியாநாட்டின், காலி நகரில் நடைபெற்ற பல்லுயிர் மகாநாட்டில் கடந்த அக்டோபரில், ஒன்றியஅரசின்தேசியபல்லுயிரிய செயாலாக்கத்திட்டம் உருவாக்கப் பட்டது, குன்மிங்மாண்ட்ரீல் பல்லுயிர் ஒப்பந்தத்தின் அடிப்படைக்கொள்கைகளைமுன்னெடுத்து செல்லும் வகையில்,செயலாக்கதிட்டத்தை



பயன்பாட்டிற்குகொண்டுவரதேவையானஅனைத்து முயற்சிகளையும் ஒன்றிய அரசு எடுத்துவருகிறது.

மேலும் நாட்டு வளங்களின் பன்முகத்தன்மையை பாதுகாக்கவும், நீடித்த வளர்ச்சி இலக்குகளை உறுதிப்படுத்தவும். 20க்கும் மேற்பட்ட அமைச்சகங்களையும்,மாநிலஅரசுகளையும் ஒருங்கினைத்து, கொள்கை முடிவுகளை எடுக்கஒன்றிய அரசுதிட்டமிட்டுள்ளது.

தேசியபல்லுயிரியசெயலாக்க திட்டத்தில் பெண்கள், இளைஞர்கள், ஒடுக்கப்பட்ட சமூகத்தினர் இவர்களின் பங்களிப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது என்றும் குன்மிங்மாண்ட்ரீல்பல்லுயிர்ஒப்பந்தத்தின் நான்குஇலக்குகளையும்23 தரவுகளையும் அடைவதில். இந்த செயலாக்க திட்டம் உறுதுணையாக இருக்கும் என்றும், மாசு கட்டுப்பாடு, நீடித்த வளர்ச்சி குறியீடுகள், பன்முகத்தன்மையைபாதுகாத்தல், காடுவள ங்கள்மற்றும் விலங்கினங்களை பெருக்குதல் ஆகிய அனைத்து துறைகளையும் மேம்பாடுஅடையஒன்றிய அரசு மாநில அரசுகளுடன் இணைந்து செயல்படும்.

இவ்வாறு ஒன்றிய இணையமைச்சர்கீர்த்திவரதன் சிங் பதில் அளித்துள்ளார்.



துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புதுக்கோட்டை வடக்கு மாவட்டச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தலைமையில், மாவட்ட மற்றும் கந்தர்வக்கோட்டை தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் நாஞ்சூர் அன்னை தெரசா மாற்றுத் திறனாளிகள் மறுவாழ்வு மையத்தில் உணவு மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் கழக விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கே.ஆர்.என்.போஸ், மாவட்டக் கவுன்சிலர் த.செல்வம், கீரனூர் நகரச் செயலாளர் வழக்கறிஞர் பி.அண்ணாதுரை, மாவட்ட நெசவாளர் அணித்தலைவர் கீரை.ராஜேந்திரசோழன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் முனைவர் சி.குறிஞ்சிவாணன், இதயம் அப்துல்லா, நைனா முகமது மற்றும் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள், தொகுதி ஒருங்கிணைப்பாளர்கள், ஒன்றிய, பேரூர் ஒருங்கிணைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்டம், திண்டிவனத்தில் பெஞ்சால் புயல் கனமழையால் பாதிக்கப்பட்ட திண்டிவனம் நகராட்சி 7 மற்றும் 8வது வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அரிசி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகளை விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப.சேகர் பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் திண்டிவனம் நகரமன்றத் தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், நகரச் செயலாளர் ஆசிரியர் கண்ணன், அவைத்தலைவர் ரவிச்சந்திரன், பொருளாளர் ராஜேந்திரன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.